CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிறுவர்களுக்கான

ஆதிசங்கரர்

கதை



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிறுவர்களுக்கான
ஆதிசங்கரர்
கதை

ஆங்கில மூலம் : சுவாமி ராகவேசானந்தர்
தமிழாக்கம் : நாடோடி
படம் : பத்மவாசன்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் சென்னை-600004

Sri Vidya Bharathi
Book Centre.
Bharathi Street,
SRINGERI - 577 139.

Sri Vidyabharathi Book Centre, Sringeri –

CC-0. In Public Domain. Digitized by eGangotri

ஆதிசங்கரரின் கதை

பிறப்பும், பிள்ளைப் பிராயமும்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர், கேரளாவில் உள்ள காலடி என்னும் கிராமத்தில், கடவுள் பக்தி கொண்ட சிவகுரு, ஆர்யாம்பாள் என்னும் அந்தண தம்பதிகள் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. அதுதான் பிள்ளையில்லாக் குறை. அவர்கள் எத்தனையோ கடுமையான விரதங்களை அனுஷ்டித்தார்கள்; சிவபெருமானைத் தங்களுக்கு ஒரு மகனை அருளும்படி வேண்டிக் கொண்டார்கள்.

ஒரு நாள் இரவு, சிவகுருவின் கனவில் சிவபெருமான் தோன்றி, சிவகுருவைப் பார்த்து, ''கடவுள் பக்தி உடையவனும், எல்லாம் அறிந்தவனும், ஆனால் பதினாறு வருட ஆயுளைமட்டும், கொண்டவனுமான மகன் வேண்டுமா, அல்லது நீண்ட ஆயுளை உடைய சாதாரண மகன் வேண்டுமா? என்று கேட்டார்.

சிவகுரு, ''நல்ல அறிவாளியும், தெய்வ பக்தியும் உள்ள மகன்தான் வேண்டும்'' என்றார்.



CC-0. In Public Domain. Digitized by eGangotri



இந்த பதிலைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான், ''நாமே உமக்கு மகனாகப் பிறப்போம் '' என்றார்.

நாளடைவில் ஆர்யாம்பாள் ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு ''சங்கரன்'' என்று பெயர் வைக்கப்பட்டது.

சிறுவயதிலிருந்தே சங்கரன் மிக்க அடக்கமாகவும். சிறந்த புத்திசாலியாகவும் விளங்கினான். மூன்று வய்திலேயே அவன் நூல்களைப் படிக்க ஆரம்பித்தான்.

அவன் தன் நான்காவது வயதில் தன் தந்தையை இழந்தான். அதனால் அவன் தாய்தான் அவனுக்கு எல்லாமானாள். அவள் அவனுக்கு ஐந்து வயதில் உபநயனம் செய்து வைத்து, பின் அவனை கல்வி கற்கக்குருவின் வீட்டிற்குஅனுப்பி வைத்தாள். அவன் இரண்டே வருடங்களில் எல்லாச் சாத்திரங்களையும் கற்றான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சங்கரன் பிரார்த்தனை செய்ய தங்க மழை

அந்தக் காலத்தில், குருகுல மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிக்ஷை வாங்கி, அதில் தங்கள் வாழ்க்கையை நடத்துவது வழக்கம். ஒரு நாள் சங்கரன், பிக்ஷைக்காகச் செல்லுகையில் ஒரு ஏழை மூதாட்டியின் வீட்டை அடைந்தான். அச் சிறுவனுக்குக் கொடுக்கத் தன் வீட்டில் ஒரு நெல்லிக் கனியைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே என்று அந்த மூதாட்டி வருத்தப்பட்டாள்.

ஆகவே, வெளியே வந்து, மிக்க அன்புடனும், மரியாதையுடனும் அக்கனியைச் சங்கரனிடம் கொடுத்தாள். அவள் காட்டிய அன்பையும், மரியாதையையும் பார்த்து சங்கரனின் மனம் நெகிழ்ந்தது. உடனே அவன், கண்களை மூடிக் கொண்டு, லக்ஷ்மிதேவியை சில ஸ்தோத்திரங்களால் வேண்டிக் கொண்டான். அந்த மூதாட்டியின் மீது அருள் பாலிக்கும்படி வேண்டினான். உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. லக்ஷ்மிதேவி, அம்மூதாட்டியின் முற்றத்தில் தங்க நெல்லிக் கனிகளை மழையெனப் பொழிந்தாள். அந்த மூதாட்டியின் வறுமை நீங்கிற்று. சங்கரன் இயற்றிய அந்த தோத்திரத்திற்கு ''கனகதாரா ஸ்தோத்திரம்'' என்று பெயர்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

துறவறம் பூணுதல்

சிறுவயதிலிருந்தே சங்கரருக்கு, உலகைத் துறந்து சன்னியாசி ஆகவேண்டும் என்ற ஆசை இருந்தது. இதற்குத் தம் அன்னையின் அனுமதியைக் கேட்டார். ஆனால் அன்னை அனுமதி தரவில்லை.

ஒரு நாள் அன்னையும், மகனும் நதியில் நீராடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு முதலை சங்கரரின் காலைப் பற்றிக் கொண்டது.

சங்கரர் உரத்த குரலில், ''அம்மா! முதலை என்னை இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது. சன்னியாசி ஆக எனக்கு அனுமதி கொடு. அப்பொழுது அது என்னை நிச்சயம் விட்டுவிடும்'' என்று சொன்னார்.

செய்வது அறியாமல் ஆர்யாம்பாள் தவித்தாள். கடைசியில் சங்கரர் சன்னியாசியாகலாம்

வீடு திரும்புதல்

குருகுலவாசம் முடிந்ததும் சங்கரன் வீடு திரும்பினான். சற்றுத் தொலைவில் இருந்த பூர்ணா நதியில் தினம் போய் நீராடுவது அவனுடைய தாயார் வழக்கம். சங்கரனுக்கு இப்பொழுது வயது எட்டு. தாயார் இப்பொழுது நதிக்குச் செல்ல மிகவும் கஷ்டப்பட்டாள் என்பதைக் கண்ட சங்கரன் அந்த நதி தேவதையைப் பிரார்த்தனை செய்தான். உடனே அந்த நதி பராசக்தியின் உத்தரவின் பேரில் தன் திசையை மாற்றிக் கொண்டு இவர்கள் வீட்டுப் பக்கம் ஓட ஆரம்பித்தது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்று உத்தரவு கொடுத்தாள். அதற்குள்ள மந்திரங்களைச் சொல்லி சங்கரர் துறவறம் மேற்கொண்டார். உடனே முதலை சங்கரர் காலை விட்டு விட்டு எங்கோ மறைந்தது. பிரம்மாவின் சாபத்திற்கு உட்பட்ட ஒரு கந்தர்வன்தான் அந்த முதலை என்று சொல்லப்படுகிறது. அவன் தன் பழைய உருவைப் பெற்று, சங்கரரை வாழ்த்தி விட்டுத் தன் இருப்பிடம் சென்றான்.

ஆனால் சங்கரர் வீடு திரும்பவில்லை. அன்னையின் கடைசி காலத்தில் தாம் வந்து சேர்வதாகவும், அவளுடைய இறுதிக் கடன்களைத் தாம் செய்வதாகவும் வாக்களித்தார்.

Sri Vidyabharathi Book Centre, Shringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குருவைச் சந்தித்தல்

சன்னியாசிகளுக்கு உரித்தான காவி உடையில் இருந்த சங்கரர் ஒரு குருவைத் தேடிச் சென்றார்.

பன்னிரண்டு மாத காலம் அலைந்து திரிந்த பிறகு, சங்கரர் நர்மதைநதிக் கரைக்கு வந்தார். அங்கிருந்த ஒரு குகையில் மிகப் பெரிய ஞானியான கோவிந்தபாதர் வசித்து வந்தார். சங்கரர் அவரை வணங்கி, தம்மை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். கோவிந்தபாதர், அவரைத் தம் சீடராக ஏற்றுக் கொண்டதோடு அவருக்குச் சன்யாச ஆசிரமும் வழங்கினார்.

சங்கரர் தம் குருவோடு சில வருடங்கள் தங்கி அவரிடமிருந்து அத்துவைத தத்துவத்தை நன்கு கற்றுணர்ந்தார். குருவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய எல்லாவற்றையும் கற்றானதும், அவர் தம்மை விட்டுச் செல்லலாம் என்று அனுமதித்தார். முதலில் காசிக்குச் சென்று அங்கு அத்துவைத தத்துவத்தைப் பிரசாரம் செய்யுமாறு குரு சொன்னார்.

Sri Vidyabharathi [illegible] eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காசியில்

குருவின் ஆணைப்படி சங்கரர், காசி வந்து, கங்கையின் புனித நதிக்கரையில் தங்கினார். இந்த இளம் துறவியின் ஆன்மிக ஒளி எல்லாரையும் இவர் பக்கம் இழுத்தது. வேதங்களையும், உபநிஷத்துக்களையும் கற்க எத்தனையோ சீடர்கள் இவரை வந்தடைந்தனர். இவர் அங்கு பல வருடங்கள் தங்கி, தினமும் கங்கையில் ஸ்நானம் செய்வதும், காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்று அவரை வணங்குவதும், சீடர்களுக்கு வேதபாடம் சொல்லிக் கொடுப்பதுமாக இருந்தார்.

இவரை அடைந்த சீடர்களில் ஒருவர் சனந்தனன் என்பவர். அவர் மிகச் சிறந்த அறிவாளி. ஒரு நாள் இவர் கங்கையின் எதிர்க்கரையில் இருந்தார். வகுப்பு நேரம் நெருங்கிவிட்டது. ஆனால் அப்பொழுது திடீர் என்று கங்கையில் வெள்ளம்!. வகுப்பைத் தவறவிட்டு விடுவோமோ என்று அவர் கவலைப்பட்டார். கங்கையைத் தாண்டி வரும்படி அவருக்குச் சங்கரர் சமிஞ்ஞை செய்தார். சனந்தனன் குருவின் கட்டளைப்படி, கங்கையைக் கடக்க ஆரம்பித்தார். அவருக்கு இருந்த குருபக்தியைப் பார்த்துவிட்டு, கங்கா தேவி அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு அடிக்கும், அவரைத் தாங்க அவர் காலடியில் ஒரு தாமரை மலரைத் தோற்றுவித்தாள். அன்றிலிருந்து அவர் பத்மபாதர் என்று அழைக்கப்படலானார். பத்மம் என்றால் தாமரை, பாதம் என்றால் காலடி. காசியில் இருந்தபோது, சங்கரர் கீதை, உபநிஷத்துக்கள், பிரம்ம சூத்திரம் இவற்றுக்கு சாஷ்யம், அதாவது விளக்கவுரை எழுதினார்.

CC-O. Sri Vidyabharati Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

பரமசிவன் சண்டாளன் உருவில்

ஒருநாள் கங்கையில் நீராடிவிட்டு, காசி விஸ்வநாதரையும் தரிசித்துவிட்டு, சங்கரர் தம் சீடர்களுடன் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது நான்கு நாய்களை அழைத்துக் கொண்டு ஒரு சண்டாளன் (தீண்டத்தகாதவன்) அவர் முன் தோன்றினான். வழியை விட்டு விலகும்படி சங்கரர் அவனைக் கேட்டுக் கொண்டார். அதற்கு அவன் சிரித்துக் கொண்டே கேட்டான், ''எதை விலகச் சொல்லுகிறீர்கள், ஆத்மாவையா, உடலையா, உலகில் உள்ள எல்லா ஆத்மாக்களும் ஒன்று. ஆத்மாவில் அசுத்தம் கிடையாது. ஒரு குடகங்கைத் தண்ணீரிலோ அல்லது ஒரு குட மதுபானத்திலோ பிரதிபிம்பமாகத் தெரியும் சந்திரன் போன்றது அது. பிரதிபிம்பத்தின் காரணமாக சந்திரன் மாசு அடையாது. இல்லை, உடலை விலகச் சொல்லுகிறீர்களா? ஆத்மா இல்லையேல் உடல் வெறும் சடம்தான். அதனால் நகர முடியாது.'' தமக்கு இத்தனை பெரிய உண்மையைச் சொல்லிக் கொடுத்ததற்காக சங்கரர் அந்தச் சண்டாளன் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார். ஆனால் சண்டாளன் மறைய அங்கு காசி விஸ்வநாதர் காட்சியளித்தார். அவர் சங்கரரை ஆசீர்வதித்துவிட்டு மறைந்தார்.

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

வேதவியாசரைச் சந்தித்தல்.

இன்னொரு நாள் ஒரு வயதான அந்தணர் அவரைப் பார்க்க வந்தார். பிரம்ம சூத்திரம் என்னும் நூலுக்கு சங்கரர் விளக்கவுரை எழுதியிருந்தார். அதைப்பற்றி தம்மோடு விவாதிக்கும்படி அந்த அந்தணர் இவருக்குச் சவால் விட்டார்.

விவாதம் தொடர்ந்து கொண்டே போயிற்று. சங்கரரின் சீடரான பத்மபாதர் விவாதத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். பிரம்ம சூத்திரம் எழுதிய வேதவியாசர்தாம் அந்தக் கிழஅந்தணர் உருவில் வந்துள்ளார் என்று அவர் உணர்ந்தார். உடனே அவர் இருவர் காலிலும் விழுந்து, ''சங்கரரோ சிவபெருமானின் அவதாரம். வேதவியாசரோ சாட்சாத் நாராயணனே ஆகும். இந்த இருவரும் இப்படி விவாதித்தால் என்னைப் போன்ற வேலைக்காரன் என்ன செய்ய முடியும்!'' என்று கேட்டார்.

வந்தவர் வியாசர் என்று தெரிந்ததும், சங்கரர் தம் விவாதத்தை நிறுத்தி, மிக்க மரியாதையுடன் அவர் காலில் விழுந்தார். வியாசர் அவரை மனம் குளிர ஆசீர்வதித்தார். ''உமக்கு ஆயுள் பதினாறு ஆண்டுகள் மட்டும்தான் என்று விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து வேதத்தை எங்கும் பிரசாரம் செய்ய வேண்டும் என்று உம்மை ஆசீர்வதிக்கிறேன்'' என்று சொன்னார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குமரில பட்டரும், மண்டன மிஸ்ரரும்

அத்துவைத தத்துவத்தைப் பிரசாரம் செய்து கொண்டே ஸ்ரீ சங்கரர் பல ஊர்களுக்குச் சென்றார். முதலில் அவர் பிரயாகை சென்றார். அந்த ஊரில் குமரில பட்டர் என்னும் பெரிய அறிஞர் இருந்தார். இவர் வேதங்களைக் கரைத்துக் குடித்தவர். யாகங்கள் செய்து வைப்பதிலும் நிபுணர். பௌத்த மதத்தின் தத்துவம்தான் என்ன என்று இவர் தெரிந்து கொள்ள விரும்பினார். அதற்காக இவர் ஒரு பௌத்தரைப் போல வேஷம் போட்டுக் கொண்டு, ஒரு பௌத்த மடத்தில் சேர்ந்தார். இவர் அங்கு பாடம் கற்றுக் கொண்டிருக்கையில் ஒரு பௌத்த பிக்ஷு வேதங்களைக் கண்டித்தார். அதை இவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் வெகு காரசாரமாக வேதங்களை ஆதரித்துப் பேசினார். அதனால் இவர் உண்மையான பௌத்தர் அல்லர் என்று அவர்கள் கண்டுகொண்டார்கள்.

அவர்கள் அவரை ஓர் உயர்ந்த கட்டடத்தின் மேல்மாடிக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கீழே தள்ளினார்கள். கீழே விழும்போது குமரில பட்டர், ''வேதங்கள் சத்தியம், சாஸ்வதம் என்பது உண்மையானால் அவை என்னைக் காப்பாற்றட்டும்'' என்ற பொருள் கொண்ட ஒரு பாடலைப் பாடினார்.

ஆச்சரியப்படும் வகையில் குமரில பட்டர் காப்பாற்றப்பட்டார். ஆனால் ஒரு கல் அவர் கண்களில் ஒன்றைக் குத்தி அதைப் பொட்டையாக்கி விட்டது. ''வேதங்கள் உண்மையானதால்'' என்று அவர் சொல்லியிருக்க வேண்டும்!

குமரில பட்டர் மீண்டும் தம் பிரசார வேலையைத் தொடங்கினார். அவர் கொள்கையாவது, "வேதங்களில் சொல்லப்பட்ட கர்மானுஷ்டானங்கள்தான் உண்மை, அவைதான் முக்திக்கு வழி'' என்பது. ஆனால் சங்கரரின் கொள்கையோ, ஞானம்தான் முக்கியம் என்பது.

ஞானமார்க்கம்தான் சிறந்தது என்பதைப் பற்றி வாதிட ஸ்ரீசங்கரர் குமரில பட்டர் இருப்பிடம் வந்து சேர்ந்தார். ஆனால் குமரில பட்டரோ, தாம் வேதத்தைப் பற்றிச் சந்தேகித்ததற்காகப் பிராயச்சித்தம் செய்து கொண்டிருந்தார். மெள்ள எரியும் தீயைக் கொண்டு, தம் உடலை மெள்ள எரித்துக் கொண்டிருந்தார். நர்மதை நதிக்கரையில் உள்ள மகிஷ்மதி நகரில் மண்டனமிஸ்ரர் என்னும் வேத விற்பன்னர் வசிப்பதாகவும், அவரோடு வாதிக்கும்படியும் சொன்னார். குமரிலரிடம் விடை பெற்றுக் கொண்டு ஸ்ரீ சங்கரர் மகிஷ்மதி நோக்கிச் சென்றார்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri



அங்கு சென்றதும், ஸ்ரீ சங்கரரும் அவருடைய சீடர்களும் நர்மதையில் நீராடிவிட்டு, மண்டன மிஸ்ரரின் வீட்டை அடைந்தார்கள். அன்று மண்டனமிஸ்ரரின் தகப்பனாருக்குச் சிரார்த்தமாகையால் கதவு மூடியிருந்தது. ஸ்ரீ சங்கரர் தம்முடைய யோக சக்தியைக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

சன்னியாசிக்கும், கிரகஸ்தருக்குமிடையே வாதம் நிகழ்ந்தது. மண்டனரின் மனைவியான உபயபாரதி மிகச் சிறந்த பண்டிதை. அவளையே மத்தியஸ்தராக நியமிப்பது என்று இருவரும் ஒப்புக் கொண்டார்கள்.

அவள் இருவர் கழுத்திலும் ஒவ்வொரு மாலையைப் போட்டாள். ''வாதத்தின் முடிவில் யார் மாலை வாடிக் கிடக்கிறதோ, அவர் தோற்ற வராகக் கருதப்படுவார்'' என்று சொன்னாள். வாதம் பல நாட்கள் தொடர்ந்தது. ஒரு நாள் மண்டனமிஸ்ரரின் கழுத்தில் இருந்த மாலை வாட ஆரம்பித்தது. தன் கணவர்தான் தோற்றார் என்று உபயபாரதி தைரியமாகச் சொன்னாள். ஸ்ரீ சங்கரரின் சீடர் ஆவது என்று மண்டனர் தீர்மானித்தார். சங்கரர் அவரைச் சன்னியாச ஆசிரமத்தில் ஏற்றுக் கொண்டு அவருக்கு சுரேஷ்வராச்சாரியார் என்று நாமமிட்டார்.

CSSS Vidyabharati Book Centre, Shimoga

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நரசிம்மர் தோன்றுதல்

சுரேஷ்வராச்சாரியாரும், மற்ற சீடர்களும் பின் தொடர, ஸ்ரீ சங்கரர் இப்பொழுது தென்திசை நோக்கி நடக்கலானார். இப்படியே நடந்து சென்று, அவர்கள் ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீசைலம் குன்றுகளை அடைந்தார்கள். அந்த காலத்தில், அங்கு காபாலிகர்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு மதவெறி இனத்தினர் வசித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் தெய்வத்துக்கு மனிதர்களை பலியாகக் கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் ஸ்ரீ சங்கரர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அப்பொழுது ஒரு காபாலிகன் அங்கு வந்தான். தியானத்தில் இருந்த ஸ்ரீ சங்கரரை எழுப்பி, ''ஒரு சக்கரவர்த்தியின் தலையையோ அல்லது ஒரு சன்னியாசியின் தலையையோ பலியாகக் கொடுத்தால் கபாலி கடவுள் தன் முன் தோன்றுவார்'' என்று சொன்னான். அவன் சொன்னதை ஸ்ரீ சங்கரர் புரிந்து கொண்டார். சிரித்துக் கொண்டே, தன் தலையை பலியாகக் கொடுக்க தமக்கு ஒரு தடையும் இல்லையென்று சொன்னார். தம் சீடர்களுக்குத் தெரியாமல் நள்ளிரவில் பைரவர் கோயிலுக்குத் தாம் வரத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்.

நள்ளிரவு சமயம் ஸ்ரீ சங்கரர் தம் படுக்கையை விட்டு எழுந்து கோயில் இருந்த குகைக்குப் புறப்பட்டார். தன் குருவுக்கு

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஏதோ ஆபத்து என்று பத்மபாதர் உணர்ந்தார். ஆகவே குருவைக் காப்பாற்றும்படி பகவான் நரசிம்மரை மனமுருக வேண்டிக் கொண்டார். அவர் பிரார்த்தனைக்கு செவிசாய்த்த பகவான் நரசிம்மர் அவர் உடலுக்குள் புகுந்தார்.

பத்மபாதர் உடனே அந்த காபாலிகன் இருந்த இடத்திற்கு ஓடினார். ஒரு சிங்கத்தின் பலம் கொண்ட அவர், காபாலிகன் கையில் இருந்த வாளைப் பிடுங்கி, அதைக் கொண்டே அவன் இதயத்தைப் பிளந்தார். பகவான் நரசிம்மரைக் கண்டு ஸ்ரீ சங்கரர் மகிழ்ந்தார். உடனே அவர் நரசிம்மரைப் பற்றி ஒரு பாடல் புனைந்தார்.

இன்னும் ஒருசீடர்.

கர்னாடகப் பிரதேசத்தில் உள்ள ஹரிஹரா, மூகாம்பிகை, ஸ்ரீ வாடி போன்ற பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு சங்கரர் சென்றார். ஸ்ரீவாடியில் கடவுள் பக்தியுள்ள ஓர் அந்தணர் வாழ்ந்தார். அவருக்கு ஒரு மகன். அவன் ஊமை. அந்த அந்தணர், அந்த ஊமை மகனை அழைத்துக் கொண்டு ஸ்ரீ சங்கரரிடம் வந்தார். ஸ்ரீ சங்கரரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். ''ஐயா, பெரியவரே! என் மகனுக்கு இப்பொழுது ஏழு வயது ஆகிறது, ஆனால் அவன் மூளை வளரவில்லை. தாங்கள் தான் அவனைக் குணப்படுத்த வேண்டும்'' என்று சொன்னார்.

ஸ்ரீ சங்கரர் பையனைப் பார்த்து, ''நீ யார்! ஏன் இப்படி சடம் மாதிரி நடிக்கிறாய்?'' என்று கேட்டார். என்ன ஆச்சரியம்! அதுவரை ஊமையாக இருந்த பையன் பேச ஆரம்பித்தான். அவன் பேசியது மட்டுமல்ல, ஒரு குருவின் உதவியின்றி ஆன்மிக அறிவு இருக்கிறதென்றும் வெளிப்படுத்தினான்.

ஸ்ரீ சங்கரர் அவனை ஆசீர்வதித்தார். பையனின் தகப்பனாரைப் பார்த்து, ''இவன் சாதாரண பையன் அல்ல. தயவு செய்து இவனை எங்களோடு அனுப்புங்கள்'' என்றார். தகப்பனார் ஒப்புக் கொண்டார். ஸ்ரீ சங்கரர் அவனுக்கு ''ஹஸ்தமாலகா'' அதாவது ''உள்ளங்கை நெல்லிக் கனி'' என்று பெயரிட்டார். உள்ளங்கை நெல்லிக் கனி போல அவனுக்கு ஆத்மா தெரிந்தது என்று பொருள்.

சிருங்கேரியில் தோடகர் வருதல்

பிறகு ஸ்ரீ சங்கரர் கர்னாடகாவில் உள்ள துங்கபத்திரை நதிக் கரையில் இருந்த சிருங்கேரி என்னும் இடத்திற்குச் சென்றார். அது ஒரு கல்வி ஸ்தலம். அங்கு ஒரு மடம் ஸ்தாபிக்க ஸ்ரீ சங்கரர் நிச்சயித்தார். அங்கு ஒரு கோயில் கட்டி அதில் சாரதா அம்பிகையைப் பிரதிஷ்டை செய்தார்.

இந்த இடத்தில் கிரி என்னும் ஒரு புதிய சீடர் ஸ்ரீ சங்கரரை வந்தடைந்தார். அவர் சற்று மந்த புத்தி உடையவர், ஆனால் குரு சங்கரர் மீது மிக்க பக்தி கொண்டிருந்தார். அல்லும் பகலும் ஸ்ரீ சங்கரருக்குத் தொண்டு செய்வதிலேயே தம் காலத்தைக் கழித்தார்.

ஒருநாள் வகுப்பு ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. ஆனால் கிரி வரவில்லை. அவர் குருவின் துணிகளை துவைப்பதற்காகப் போயிருந்தார். அவரும் வர்ட்டுமே என்று ஸ்ரீ சங்கரர் வகுப்பு ஆரம்பிப்பதை சற்று தாமதப்படுத்தினார். சில சீடர்களுக்கு இது வேதனையாக இருந்தது. ''கிரியோ குட்டிச் சுவரைப் போன்று மந்தமாக இருக்கிறார். அவருக்காக நாம் காத்திருப்பானேன்!'' என்றார் பத்மபாதர்.

தம் சீடர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க ஸ்ரீ சங்கரர் விரும்பினார். மனதிற்குள்ளேயே அவர் கிரியை ஆசீர்வதித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் கிரி உள்ளே நுழைந்தார். உள்ளே நுழையும் போதே அவர் தம் குருவைப் பாராட்டி ''தோடகா'' என்னும் சீரில், எட்டு ஸ்லோகங்கள் கொண்ட ஒரு பாட்டைப் பாடிக் கொண்டு வந்தார். அதிலிருந்து அவருக்கு மற்ற சீடர்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மிக்க மதிப்பு வைக்க ஆரம்பித்தனர். அவர் அந்த ஸ்தோத்திரத்தை ''தோடகா'' என்னும் சீரில் இயற்றியதால் அன்றிலிருந்து அவர் தோடகாச்சாரியார் என்று அழைக்கப்படலானார்.

ஆர்யாம்பாவின் மரணம்

சிருங்கேரியில் இருக்கும்போது, திடீரென்று ஒருநாள் ஸ்ரீ சங்கரருக்கு தம் தாயின் உடல் நிலை சரியில்லை என்றும் அவளுடைய இறுதி நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் உணர்ந்தார். பத்மபாதரை மட்டும் அழைத்துக் கொண்டு, ஸ்ரீ சங்கரர் காலடி சென்றார். தம் தாயார் வியாதியாகக் கிடப்பதைக் கண்டார். மகனைக் கண்டதில் தாயாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தாயாரைப் பார்த்து ஸ்ரீ சங்கரர் மிக்க அன்புடன், ''அம்மா! கவலைப் படாதே. உனக்கு என்ன ஆசை சொல்லு'' என்று கேட்டார்.

அதற்கு அந்த அம்மாள், ''என் மகனே! பகவானின் பெருமையைப் பாடு, நான் அவரைப் பார்க்கும்படி செய்'' என்றாள். ஸ்ரீ சங்கரர் மகாவிஷ்ணுவைப் பற்றி ஒரு பாடல் பாடினார். மகாவிஷ்ணுவின் தரிசனம் அந்த அம்மாளுக்குக் கிடைத்தது. கடவுள் ஞாபகமாகவே அந்த அம்மாள் கண்ணை மூடினாள்.

பிறகு ஒரு பிரச்சனை எழுந்தது. தாயாரின் இறுதிச் சடங்குகளைச் செய்வதாக ஸ்ரீ சங்கரர் வாக்களித்திருந்தார். ஆனால் சாஸ்திரப்படி சன்னியாசி நெருப்பு சம்பந்தப்பட்ட சடங்குகள் ஒன்றிலும் ஈடுபடக்கூடாது. அதனால் உள்ளூர் மக்கள் நெருப்புக்கூட கொடுக்க மறுத்தனர். ஆனால் ஸ்ரீ சங்கரர் மனம் தளரவில்லை; வீட்டுக்கு முன்னால் சில காய்ந்த கட்டைகளைப் பரப்பி சிதை தயாரித்தார். தம் வலது கையிலிருந்து தீயை உண்டாக்கி தகனச் சடங்கை முடித்தார்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

இரண்டாவது திக் விஜயம்

காலடியை விட்டு, ஸ்ரீ சங்கரர் சிருங்கேரியை அடைந்தார். பிறகு நாடு முழுவதும் திக் விஜயம் செய்ய ஆரம்பித்தார். அவர் திருப்பதி, சிதம்பரம், ராமேஸ்வரம், மதுரை, நாசிக், சோமநாத், உஜ்ஜையின், மதுரா முதலிய இடங்களுக்குச் சென்று விட்டு, கடைசியில் காஷ்மீரை அடைந்தார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சர்வஞ்ஞ பீடம்

இந்தியாவில், காஷ்மீரம் முக்கியமான இடங்களில் ஒன்று. அங்கு அன்னை சாரதா வசிக்கிறாள் என்று சொல்லப்படுகிறது. அங்கு நான்கு வாசல்கள் கொண்ட சாரதா கோயில் ஒன்று உள்ளது. அங்கு சர்வஞ்ஞ பீடம் ஒன்று உள்ளது. எல்லாம் அறிந்த சர்வஞ்ஞன்தான் இந்தப் பீடத்தை அலங்கரிக்கலாம். மற்றவர்களுக்கு அதன் கதவைத் திறக்கமாட்டார்கள். மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் வந்த பல அறிஞர்கள் தங்கள் தகுதியை நிரூபிப்பதற்காக மேற்கு, கிழக்கு; வடக்கு கதவுகளைத் திறக்கச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தெற்கிலிருந்து யாரும் வராததால் தென்திசைக் கதவு மூடிய படியே கிடந்தது.

இதைக் கேள்வியுற்ற ஸ்ரீ சங்கரர் தென்திசைக் கதவு வழியாக அக்கோயிலுக்குள் நுழைய வேண்டுமென்று, அக்கோயிலை நோக்கிச் சென்றார். அவர் தென்திசைக் கதவருகே நிறுத்தப்பட்டார். அவரைப் பரிசோதிப்பதற்காக பல அறிஞர்கள் அவரைப் பலகேள்விகள் கேட்டனர். அவர் எல்லாக் கேள்விகளுக்கும் அழகாகப் பதில் அளித்தார். அவர் பதில்களைக் கேட்டு அந்த அறிஞர்கள் திருப்தியடைய, தென்திசைக் கதவு திறக்கப்பட்டது. ஸ்ரீ சங்கரர் பத்மபாதருடன் உள்ளே நுழைந்தார்.

ஸ்ரீ சங்கரர் அங்கிருந்த சிம்மாசனத்தில் உட்காரப் போனார். அப்பொழுது சரஸ்வதி தேவியின் குரல் கேட்டது. ''இந்தச் சிம்மாசனத்தில் உட்கார சர்வஞ்ஞராக இருந்தால் மட்டும் போதாது, சர்வ சுத்தி உடையவராகவும் இருக்கவேண்டும்'' என்றாள் சரஸ்வதி.

அதற்கு ஸ்ரீ சங்கரர், ''பிறந்ததிலிருந்து நான் ஒரு பாவத்தையும் அறியேன். நான் சர்வசுத்தன்'' என்றார். இதைக் கேட்டு சரஸ்வதி மகிழ, ஸ்ரீ சங்கரர் சர்வஞ்ஞ பீடத்தில் ஏறி அமர்ந்தார்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

வந்த காரியம் முடிந்தது

பிறகு அவர் சில சீடர்களை மட்டும் அழைத்துக் கொண்டு பத்ரி சென்றார். அங்கு சில நாட்கள் தங்கி ஆசைப்பட்டவர்களுக்கு அத்துவைத தத்துவத்தை எடுத்துரைத்தார். சிவபெருமானின் அவதாரமாகிய ஸ்ரீ சங்கரர் இப்பொழுது தம்முடைய முப்பத்திரண்டாவது வயதை அடைந்தார்.

பிறகு அவர் சிவனுக்கு மிக உகந்த க்ஷேத்திரமாகிய கேதாரம் சென்றார். அங்கிருந்த கடும் குளிரை அவருடைய சீடர்களால் தாங்க முடியவில்லை. அதனால் ஸ்ரீ சங்கரர் சிவபெருமானைக் குறித்துப் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனைக்குச் சிவபெருமான் செவி சாய்க்க அங்கு ஒரு சுடு தண்ணீர் ஊற்று கிளம்பிற்று. இன்றும் அது ஒரு சிறு வாய்க்காலாக ஓடி, ஸ்ரீ ஆச்சார்ய சங்கரரின் பெருமையை பறைசாற்றுகிறது.

சிவனின் இந்த அவதாரத்தை சிவலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக, பிரம்மாவும், தேவர்களும், ரிஷிகளும் அங்கு வந்தார்கள். தேவர்கள் அவர் மீது பூ மாரி பொழிந்து, சிவபெருமானின் பெருமைகளைப் பாடினார்கள். மானிடர்களின் வரப்பிரசாதமாகிய ஸ்ரீ சங்கரர் தம் தெய்வீக இருப்பிடத்தைச் சேர்ந்தார். அந்தத் தெய்வீக சுடர் தெய்வீகக் கொழுந்தில் கலந்தது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. Mumukshu Bhawan Varanasi. Digitized by eGangotri

ஸ்ரீ சங்கரர் நிறுவிய மடங்கள்

அத்துவைத தத்துவத்தைப் பிரசாரம் செய்வ தற்காக ஸ்ரீ சங்கரர் இந்தியாவின் நான்கு திசைக ளில் நான்கு மடங்கள் நிறுவினார். அவருடைய நான்கு முக்கிய சீடர்கள் இந்த நான்கு மடங்களின் முதல் பீடாதிபதி ஆனார்கள். அந்த நான்கு மடங்களாவன:- தெற்கில், சுரேஷ்வராச்சாரியார் தலைமையில் சிருங்கேரி, மேற்கில், ஹஸ்தமா லாகா தலைமையில் துவாரகை; வடக்கில், தோடகாச்சாரியார் தலைமையில் பத்ரி; கிழக்கில் பத்மபாதர் தலைமையில் பூரி.

ஸ்ரீ சங்கரரின் போதனைகள்.

நம் இந்திய தத்துவசாஸ்திரம், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுக்கு முறையே ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர் இவர்கள் தாம் முக்கிய பிரசாரகர்கள். அத்துவைத தத்துவத் தின் முக்கிய அம்சங்கள் என்ன என்று நாம் தெரிந்து கொள்வோம்.

வேதங்களை நன்கு ஓதியவர், பாவமற்றவர், ஆசையற்றவர், பிரம்மத்தை அறிந்தவர் இவர் தான் உண்மையான ஆசாரியன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

இத்தகைய ஆசாரியனைப் பக்தியுடன் வணங்கி,அவருக்குத்தொடர்ந்து தொண்டுசெய்து கொண்டு வந்தால், சீடன் ஆத்ம ஞானத்தை அடைவான்.

கண்ணாடி போன்று மனது சுத்தமானால், அதில் ஞானம் பிரகாசிக்கும். ஆகையால் சித்தத் தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்.

நல்ல அறிவொளி பெற்ற யோகி ஞானக்கண் கொண்டு, புவனம் அனைத்தையும் தன்னுள்ளே பார்க்கிறான். எதையும் ஆத்மாவாகக் காண்கி றான்.

அமைதியான மனநிலையிலிருந்து அறிவு பிறக்கிறது. அறிவின் காரணமாக இந்திரிய போகங்களிலிருந்து விடுதலை பெறுகிறோம். இதன் காரணமாக ஆத்ம ஞானம் உண்டாகிறது. இதன் காரணமாக சாந்தி பிறக்கிறது. நாமும் பிரம் மமும் வேறில்லை என்கிற சரியான ஞானத்தின் காரணமாக நாம் ஜனன, மரண பிடியிலிருந்து விடுபடுகிறோம்.

சத், சித், ஆனந்தமாக உள்ள ஆத்மாவை, தொடர்ந்து சாதகத்தின் மூலமாகத்தான் அடைய முடியும். ஆகவே ஞானம் வேண்டுவோர் பிரம் மத்தையோ, ஆத்மாவையோ நீண்ட நேரம் தியா னம் செய்ய வேண்டும்.

எப்படி ஒரு விளக்கு ஒரு ஜாடிக்கோ, சட் டிக்கோ பிரகாசம் கொடுக்கிறதோ, அதே போன்று, ஆத்மா ஒன்றுதான் நம் மனது, இந்திரி யங்கள் முதலியவற்றுக்கு பிரகாசம் கொடுக்கிறது.

ஒரு எரியும் விளக்கைப் பார்க்க இன்னொரு விளக்கு தேவையில்லை. அதே போன்று, ஆத் மாவே சுயம் பிரகாசமானதால் அது தெரிய இன் னொரு பிரகாசம் தேவையில்லை.

ஸ்ரீ சங்கரர் சொல்லுகிறார், ''எத்தனையோ சாத்திரங்களில் சொல்லப்படும் உண்மையை நான் அரை சுலோகத்தில் சொல்லி உங்களுக்கு விளங்க வைக்கிறேன்'' என்று.

அந்த சுலோகம் என்ன தெரியுமா! ''பிரம்மம் தான் சத்தியம். ஜகத் மித்யை. ஜீவன் பிரம்மத் தைத் தவிர வேறில்லை.''



Published by
©The President
Sri Ramakrishna Math
Mylapore, Madras 4.

All Rights Reserved
First Edition
I-5M 3C-12-88
ISBN 81-7120-120-2

Printed in India at
Sri Ramakrishna Math
offset Press
Mylapore, Madras-4.
Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ISBN 81-7120-120-2

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Siruvargalukkana Adi Sankarar Kathai (Tamil) Rs. 6.00

Sri Vidyabharathi Book Centre, Sringeri